[1975 அக்டோபர் 29

திரு. என். கிட்டப்பா: வீடு கட்டும் செலவைக் குறைக்க தக்கைக் கல் முறை ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜப்பான் முறையில் வீடுகளைக் கட்டினால் சிக்கனமாகக் கட்ட முடியும் என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அத்தகைய முறைகளை அரசு ஆராய்ந்து சிக்கனமான முறையில் வீடுகளைக் கட்டுவதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தக்கைக் கல் முறையில் இப்போது கூரைகளில் மட்டும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மற்றவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பானிய முறைபற்றி ஆராயவில்லை.

ஒசூர் கால்நடைப் பண்ணை

*119 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74-ல் ஒசூர் கால்நடை வளர்ப்புப் பண்ணையில் சிந்திப் பசுக்கள் வளர்ப்பை தீவிரப்படுத்த மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 4,56,000.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஒசூர் கால்நடைப் பண்ணையை மேலும் அபிவிருத்தி செய்ய மாநில அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா? அதன் விவரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில அரசுதான் செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் இதுபோன்று சென்ட். பர்சென்ட் கிராண்ட் எல்லா மாநிலங்களுக்கும் கொடுப்பதுபோல் நமது மாநிலத்திற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister what kind of development they are making there with regard to Sindhi cows? May I also know from the Hon. Minister whether any new schemes have been introduced?

1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சிந்தி பசு இன அபிவிருத்திக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் சிந்தி இன பசுக்கள் உற்பத்தி செய்கிற திட்டம் மேற்கொள்ளப்படும்.

சீட்டுக் கம்பெனிகள்

* 120 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சீட்டுக் கம்பெனிகள், வாடிக்கையாளர்களிடம் மோசடி செய்ததற்காக எந்தெந்த கம்பெனிகள்மேல் 1974-ம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒரு விவர அறிக்கை @ பேரவை முன்வைக்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: இந்த அறிக்கையை பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கிறது. ஒரு ஆண்டில் மட்டும் 91 கம்பெனிகள் மீது மோசடிக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ கம்பெனிகள்மீது மோசடிக் கேஸ்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, பல புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன. மாயவரத்தில் உள்ள சம்பத் பைனான்ஸில் லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள். இப்படி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. கே. எ. வகாப்: இப்படி சீட்டுக் கம்பெனிகள் வைத்து மோசடி செய்கிறவர்கள்மீது மிஸா சட்டத்தை உபயோகப்படுத்தி அவர்களைக் கைது செய்து ஏமாற்றப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய பணத்தை டெப்பாசிட் தொகையிலிருந்து திருப்பித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பல தவறுகள் நடந்துகொண்டிருப்பதாகக் குறிப்பிலிருந்து தெரிகிறது. டோட்டல் நம்பர் ஆப் அபன்ஸஸ்

@ 296-301 -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.